20.01.2026.

**CC.53/2023**

**(ம.சா.1.) புகார்தாரர் மூர்த்தி, த/பெ.கோவிந்தசாமி.**

**எதிர் மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் தேசூர் காவல் நிலையத்தில் எதிரிகளுக்கு எதிராக இதுவரை எத்தனை புகார் கொடுத்திருப்பேன் என்றால் அதற்கு கணக்கே இல்லை. நான் 20.04.2023ம் தேதி சம்பவம் நடந்ததாக கூறி எதிரிகளுக்கு எதிராக காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் வந்தவாசி அரசு மருத்துவமனையில் எத்தனை நாட்கள் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் 4 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். நான் வந்தவாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது தேசூர் போலிசார் ஏதேனும் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கவில்லை. அவ்வாறு நான் அரசு மருத்துவமனையில் சேர்ந்தபோது மருத்துவரிடம் என்ன காரணத்திற்காக சிகிச்சைக்கு வந்தேன் என்று கூறினேனா என்றால் கூறினேன். நான் பொதுவாக கையெழுத்து எந்த மொழியில் செய்வேன் என்றால் தமிழில் பெயர் மட்டும் எழுதுவேன். ஆங்கிலத்தில் நான் கையெழுத்திடும் பழக்கம் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள மனுவுடன் தாக்கல் செய்துள்ள 24.04.2023ம் தேதியிட்ட புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம் என்னுடையதுதான். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும், வக்காலத்திலும் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் வழக்கிற்காக காவல் நிலையத்தில் உள்ள கையெழுத்தும் புகார் மனுவில் உள்ள கையெழுத்தும் என்னுடையது என்று மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என் நிலத்திற்கு செல்லும்போது தடுமாறி கீழே விழுந்து ஏற்படுத்திக்கொண்ட காயத்தை பயன்படுத்தி எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர் என்றால் ஆமாம் 6ம் எதிர்மனுதாரரை தவிர. 6ம் எதிர்மனுதாரர் வேறு சமுதாயத்தை சார்ந்தவர் என்றால் சரியல்ல.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court,
Read over to the witness and Admitted
by him/her to be correct.

Sd/-V.Arangasamy,
Judicial Magistrate,
Vandavasi.